செ.வெ.எண்:25 நாள்: 21.08.2020

**பத்திரிக்கைச் செய்தி**

அரியலூர் மாவட்டத்தில் கத்தரி, வெண்டை, முருங்கை, கொடிவகை காய்கறிகள் போன்றவை 2000 எக்டருக்கும் அதிகமாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது, அரியலூர் மாவட்டத்தில் காய்கறி பயிர் சாகுபடியினை அதிகரிக்கவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும் ஊக்கத் தொகை வழங்கிட இலக்கு பெறப்பட்டுள்ளது.

தேசிய தோட்டக்கலை இயக்கம், நீர்வள நிலவள திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் காய்கறி சாகுபடி விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக 1 எக்டருக்கு ரூ.2,500/- வழங்க ரூ.22.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

எனவே, அரியலூர் மாவட்டத்தில் கத்தரி, வெண்டை, முருங்கை, மிளகாய், பாகல், புடல், பூசணி போன்ற காய்கறிகள் சாகுபடி செய்யும் விவசாயிகள் காய்கறிகளை சாகுபடி செய்வதற்கு கொள்முதல் செய்த விதைகள், நடவு பொருட்களின் விலை பட்டியல், சிட்டா, அடங்கல், ஆதார், குடும்ப அட்டை நகல், வங்கி கணக்கு புத்தக நகல் மற்றும் வயல் புகைப்படங்களுடன் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தில் காய்கறி சாகுபடியின் அடிப்படையில் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை ஊக்கத் தொகை மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் நுண்ணீர் பாசன மேலாண்மை தகவல் அமைப்பிலும் பதிவு செய்து பயன்பெறலாம் என மாவட்டஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**